# முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்தி மகிழ்ந்த காட்சி!



மாண்பமை உச்சநீதிமன்றம், ஆளுநர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றி அனுப்பிய சட்டமுன்வடிவுகளுக்கு ஒப்புதல் அளிக்காமல் நிறுத்தி வைத்திருந்தது சட்டவிரோதமானது என்று தமிழ்நாடு அரசுக்கு சாதகமாகத் தீர்ப்பளித்ததையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (8.4.2025) தலைமைச் செயலகத்தில், நாடாளுமன்ற உறுப்பினரும், மூத்த வழக்கறிஞருமான பி. வில்சன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி, வழக்கறிஞர் ரிச்சர்ட் வில்சன் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கழகப் பொதுச் செயலாளரும் நீர்வளத் துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்களுக்கு இனிப்பு வழங்கி மகிழ்ந்த காட்சி!



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி அவர்களுக்கு இனிப்பு வழங்கி மகிழ்ந்த காட்சி!



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு இனிப்பு வழங்கி மகிழ்ந்த காட்சி!

### உடல் நலக் குறைவு! ஒன்றிய முன்னாள் நிதி அமைச்சர்

## ப.சிதம்பரம் - அகமதாபாத் மருத்துவமனையில் அனுமதி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் – கார்த்தி சிதம்பரத்தை தொடர்புகொண்டு நலம் கேட்டறிந்தார்!

சென்னை, ஏப்.10-


ஒன்றிய முன்னாள் நிதி அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ப. சிதம்பரம் அவர்கள் உடல்நலக் குறைவு காரணமாக அகமதாபாத்தில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இச் செய்தி அறிந்து, அவரது மகனும், நாடாளுமன்ற உறுப்பினருமான கார்த்திக் சிதம்பரம் அவர்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.4.2025) தொலைபேசி வாயிலாகத் தொடர்புகொண்டு ப.சிதம்பரம் அவர்களின் உடல்நிலை குறித்துக் கேட்டறிந்தார்.




## இளம்பரிதி

**ஏப்ரல் 10 (1995)**



பழம்பெரும் இயக்கத் தோழர், சென்னை மாவட்டத்தில் கழகம் வளர்த்த முன்னோடிகளில் ஒருவர், பெரியாரின் சீடராக, பேரறிஞர் அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உற்ற உடன்பிறப்பாக விளங்கியவர்.

தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் இருந்தார்.

"சென்னை மாவட்டக் கழகத்தின் செயலாளராகப் பொறுப்பு வகித்து அவர் ஆற்றிய அரும்பணிகள் என்றைக்கும் மறக்கக்கூடியவை அல்ல! தமிழகம் முழுதும் பட்டிதொட்டி முதல் பட்டினக்கரை வரையில் சுற்றுப்பயணம் செய்து இந்த இயக்கத்தின் அடித்தளத்தை வலுப்படுத்தியவர்" என தலைவர் கலைஞரால் புகழப்பட்டவர்.

தலைவர் கலைஞர் அவர்கள் 1988ஆம் ஆண்டு முப்பெரும் விழாவின்போது தலைமைக் கழகச் சார்பில் பெரியார் விருதினை வழங்கிச் சிறப்பித்தார்கள்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### நேர்மையான, நியாயமான பாதை வெற்றியைப் பெற்றுத் தரும் என்பதில் உறுதிகொண்டவர் நம் முதலமைச்சர்!

## தமிழ்நாட்டை மேலும் தலைநிமிரச் செய்திருக்கிறார்!

### தமிழ்நாட்டு மக்கள் சார்பில் நன்றி! பேரவையில் – அமைச்சர் எஸ்.ரகுபதி பேச்சு!

**சென்னை, ஏப். 10 –**

**உச்சநீதிமன்றத் தீர்ப்பை அடுத்து சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, ''தமிழ்நாட்டை மேலும் தலைநிமிரச் செய்திருக்கிறார், நமது முதல்வர் அவர்கள்!'' என்று குறிப்பிட்டார்.**



அமைச்சர் எஸ்.ரகுபதி கூறியதாவது:-

முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு உச்ச நீதிமன்றத்திலே சட்டப் போராட்டம் நடத்தி பெற்றுத் தந்திருக்கின்ற அந்த வரலாற்றுத் தீர்ப்பு என்பது தமிழ்நாட்டு மக்களுக்கு மட்டும் பெருமையினைப் பெற்றுத் தருகின்ற தீர்ப்பு அல்ல; அகில இந்திய அரசியலுக்கும், அரசியல்வாதிகளுக்கும், இந்தியாவிலே இருக்கக்கூடிய பல்வேறு மாநிலங்களுக்கும் சிறப்புச் சேர்க்கின்ற வகையிலே அவர்கள் பெற்றுத் தந்திருக்கிற தீர்ப்பு என்பது யாராலும் மறுக்கமுடியாத ஒரு தீர்ப்பு ஆகும்.

முதலமைச்சர் அவர்கள் பெற்றுத் தந்திருக்கிற அந்த தீர்ப்பு களிலே ஒருசிலவற்றை நான் இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். சட்டப்பேரவையிலே இரண்டாவது முறையாக நிறைவேற்றி அனுப்பிய 10 மசோதாக்களுக்கு ஆளுநர் அன்றைய தினமே ஒப்புதல் தந்திருக்க வேண்டும் என்கிற தீர்ப்பை உச்ச நீதிமன்றம் தந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) முதலமைச்சர் அவர்கள் எடுத்திருக்கிற முடிவிற்குக் கிடைத்திருக்கிற மிகப்பெரிய வெற்றி.

**நீதிமன்றத்தில் ஒலித்த நமது குரல்!**

அடுத்ததாகச் சொல்லப்போவோமேயானால், "தமிழ்நாடு அரசு இரண்டாவது முறையாக நிறைவேற்றி அனுப்பிய அந்த 10 மசோதாக்களை குடியரசுத் தலைவருக்கு ஆளுநர் அனுப்பியது செல்லாது" என்று உச்ச நீதிமன்றம் அடித்துச் சொல்லி இருக்கின்றது. இதுவும் நம்முடைய குரல் இன்றைக்கு நீதிமன்றத்திலே ஒலித்துக் கொண்டிருக்கிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு இந்தியாவிலே இருக்கின்ற எதிர்க்கட்சி ஆளுகின்ற மாநிலங்களுக்கெல்லாம் குரல் கொடுக்கக் கூடிய ஒரு முதலமைச்சர். இன்றைக்கு அகில இந்தியத் தலைவர் என்பதை இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பின் மூலமாக அவர்கள் நிருபித்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மூன்றாவதாக சொல்லப்போவோமேயானால் "ஆளுநர் ஆர்.என். ரவி அவர்களின் செயல்பாடுகள் நேர்மையானதாக இல்லை" என்று உச்ச நீதிமன்றம் சொல்லி இருக்கிறது; நாங்கள் சொல்லவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்ததாக, "மாநில அரசுக்கு ஆளுநர் வீண் தடைகளை ஏற்படுத்தக்கூடாது, அது மக்கள் நலன்களைப் பாதிக்கும்" என்று நாங்கள் சொல்லவில்லை; உச்ச நீதிமன்றம் சொல்லி இருக்கிறது.

**கண்டனம்!**

அடுத்ததாகச் சொல்லப்போவோமேயானால் "உயர் அதிகாரத்திலே இருப்பவர்கள் அரசியல் சாசனத்தின் முக்கிய அம்சங்களைப் பின்பற்ற வேண்டும் என்று ஆளுநருக்கு உச்ச நீதிமன்றம் கண்டனம் தெரிவித்திருக்கிறது.

இதிலிருந்து முதலமைச்சர் அவர்கள் என்றைக்குமே சட்டத்தின்மீது நம்பிக்கை உள்ளவர்கள். தனக்கு சட்டப் போராட்டம் என்றைக்கும் வெற்றியைத் தரும். ஏன் என்று சொன்னால், தான் செல்கின்ற பாதை நியாயமான, நேர்மையான பாதை. அந்த நேர்மையான, நியாயமான பாதை தனக்கு வெற்றியைப் பெற்றுத்தரும் என்பதிலே உறுதியாக உள்ளவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். எனவேதான், இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை இன்றைக்கு நமக்கு அவர்கள் பெற்றுத் தந்திருக்கிறார்கள். இதனால் இன்றைக்கு தமிழ்நாட்டை தலைநிமிரச் செய்திருக்கிற முதலமைச்சர் என்கிற பெருமையை தமிழ்நாட்டிற்குப் பெற்றுத் தந்திருக்கிற அவர்களுக்கு தமிழ்நாட்டு மக்கள் அத்தனை பேரினுடைய சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதிகுறிப்பிட்டார்.



ஆளுநருக்கு எதிராக தமிழ்நாடு அரசின் சார்பில் தொடரப்பட்ட வழக்கில் உச்சநீதிமன்ற வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பினை வரவேற்றும், தமிழ்நாடு முதலமைச்சரைப் பாராட்டியும், தஞ்சை மத்திய மாவட்டம், தஞ்சை மாநகர தி.மு.க சார்பில் மாநகரச் செயலாளர் மேயர் சண்.இராமநாதன் தலைமையில் பழைய பேருந்து நிலையம் அருகில் பட்டாசு வெடித்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி கொண்டாடினர். இதில் துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி, பகுதிச் செயலாளர்கள் மேத்தா, சதாசிவம், கார்த்திகேயன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.



தருமபுரி கிழக்கு மாவட்டம் இண்டூர் பேருந்து நிலையம் அருகில் இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கான சுயாட்சியை உச்ச நீதிமன்றத்தின் வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பின் மூலம் போராடி வென்றுள்ள முதலமைச்சர், கழகத்தலைவர் அவர்களுக்கும், கழக அரசுக்கும் நன்றி தெரிவிக்கும் வகையில் தருமபுரி கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர்.ஆ.மணி தலைமையில் பட்டாசுகள் வெடித்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டது. உடன் முன்னாள் மாவட்ட செயலாளர் தடங்கம்.பெ.சுப்ரமணி, டாக்டர்.ஆர்.பி.செந்தில்குமார், ரேணுகாதேவி, வைகுந்தம்,ஏ.எஸ். சண்முகம், எச்சனஹள்ளி சண்முகம், என்.பி.பெரியண்ணன் மற்றும் கழகத்தினர் உள்ளனர்.